Vol : 8 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் Issue : 12

Price Rs. 3

# HUNDRED VILLAGE MINISTRY

OCTOBER 2008

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

Annual Subscription India Rs.25 Foreign Rs.250

## 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை

✝ நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன். ✝




TVGM - 2008 அக்டோபர்

கர்த்தரின் வாக்குத்தத்தம்

**என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்.**

யாத்திராகமம் 33 : 14



கர்த்தருடைய கிருபையினால் 28.08.2008 அன்று **விருகாவூர்** கிராமத்தில் கட்டப்பட்டுள்ள **ஏல்பெத்தேல்** JMHA ஜெபவீட்டை Sis. **செல்வி ராமசந்திரன்** (நியூபரிபார்க்) அவர்கள் ஜெபித்து தேவனுடைய மகிமைக்கென்று திறந்து வைத்து சாட்சியளித்தார்கள்.

**Thanks:** *Bro.Arul N.Joseph,* U.K.
S/o. Pastor Joseph Kanagaratnam
**Emmanuel Christian Fellowship.**

**இயேசு கிறிஸ்துவே கர்த்தர்**

**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**CHIEF EXECUTIVE OFFICER**
காரியதரிசி கடித நாள்: 09.09.08.



**கி**றிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,
தேவசமாதானம் உண்டாவதாக!

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 2008 ஆகஸ்டு மாதத்தில் 6 ஜெபவீடுகளை கட்டி முடித்து பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை.

தற்சமயம் கூடுதலாக 8 இடங்களில் ஜெபவீடு கட்டப்பட்டு வருகிறது. 3 கிராமங்களில் கட்டி முடித்தும் திறக்க முடியாமலிருக்கிறது.

புதிதாக இன்னும் 9 இடங்களை டி.வி.ஜி.எம். ஸ்தாபகர் நேரடியாக பார்வையிட்டு வந்தார்கள். மேலும் விண்ணப்பங்கள் வந்துகொண்டேயிருக்கிறது. ஜெபத்துடன் தேவ வழிநடத்துதலுக்காக காத்திருக்கிறோம்.

டி.வி.ஜி.எம். அலுவலக சேவைக்கு அர்ப்பணித்தவர்கள் இதுவரை போதுமான அளவு கிடைக்காததால் அநேக வேலைகள் தடைபட்டுள்ளது. ஜெபியுங்கள்.

கர்த்தருக்கு சித்தமானால் 2008 அக்டோபர் 10 – 12 **கலிலேயா முகாமில்** நேரடியாக சந்திப்போம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.
கிறிஸ்துவின் பணியில்,
***Stephen Christopher***

## உள் பக்கம் ...


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| Wrapper – வாக்குத்தத்தம் | Photos |
| Wrapper - Inner | Photos |
| காரியதரிசி கடிதம் | 1 |
| வாக்குத்தத்த செய்தி | 2 - 4 |
| Hindi, Malayalam, English | 5 - 8 |
| திருநெல்வேலி – ராதாபுரம் 100 கிராம ஊழியம் நோட்டீஸ் | 9 |
| புதுப்பாளையம் யூனியன் 100 கிராம ஊழிய அறிக்கை நாட்டு நடப்பு செய்திகள் இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை | 10 -13 |
| சாட்சிகள் இயேசுவை விரும்புவோர் முகாம் | 14 |
| கலிலேயா முகாம் 2008 | 15 |
| பாஸ்டர் பால் கமலேந்திரன் டி.வி.ஜி.எம்.வருகை | 16 |
| சகோதரி ஜமுனா வீரதாஸ் டி.வி.ஜி.எம்.வருகை | 17 |
| TVGM ஸ்தாபகரிடமிருந்து | 18 |
| தினசரி ஜெபக்குறிப்புகள் | 19 |
| துதி ஆராதனை, அறிமுகப் பணி அலுவலகம் | 20 |
| போட்டோ (ஜெப வீடுகள்) | W 3 |
| தொடர்பு முகவரி | W 4 |

# என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும் . யாத். 33 : 14

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தேவஊழியரே, விசுவாசியே!

இப்போதும் தேவனுடைய **சமுகத்தை** நோக்கி, கெஞ்சுங்கள். அப்பொழுது நம்மேல் இரங்குவார்.

**ஓசியா 9:15** “அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம் அவர்களை நான் என் சமுகத்தைவிட்டுத் துரத்துவேன்” என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறபடியால்,

**பிரசங்கி 5:2**ன் படி தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இரு.

**நீதிமொழிகள் 25:6** ராஜாவின் சமுகத்தில் மேன்மை பாராட்டாதே.

இன்றைக்கு தேவசமுகம், தேவ பிரசன்னத்தின் மேன்மையை அறியாமல் போனபடியினால் அவருடைய சமுகத்தின் முன்னால் நின்று நம்மை மேன்மை பாராட்டிக் கொண்டிருக்கிறோம். துணிகரமாய் பேசுகிறோம். மனம் பதறி வார்த்தையை கொட்டுகிறோம். ஆதலால் கர்த்தர் கோபங்கொண்டு அவர்களை நானே என் சமுகத்தை விட்டு துரத்துவேன் என்று கூறுகிறார்.

ஆதலால் இன்று உங்களை தாழ்த்தி இப்போதும் தேவனுடைய சமுகத்தை நோக்கி கெஞ்சுங்கள். அப்பொழுது நம்மேல் இரங்குவார். அல்லேலூயா.

முதலாவது தேவனுடைய சமுகம் எப்படிப்பட்டது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

### 1. செம்மையானவர்கள் வாசம் பண்ணும் இடம்.

**சங்கீதம் 140:13** செம்மையானவர்கள் உமது சமுகத்தில் வாசம் பண்ணுவார்கள்.

### 2. மகிமையும் கனமும் உண்டு.

**சங்கீதம் 96:6** மகிமையும், கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது.

### 3. பரிபூரண ஆனந்தம் உண்டு.

**சங்கீதம் 16:11** உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உமது வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

### 4. சத்துருக்கள் அழிவார்கள்.

**சங்கீதம் 9:3** என் சத்துருக்கள் பின்னாக திரும்பும்போது, உமது சமுகத்தில் அவர்கள் இடறுண்டு அழிந்து போவார்கள்.

**இயேசுகிறிஸ்து கூறுவதைக் கேளுங்கள்:–**

**நீதிமொழிகள் 8:30** நான் அவர் அருகே செல்லப் பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவே நமக்காக பிதாவினுடைய சமுகத்தில் பிரவேசித்து மனமகிழ்ச்சியாயிருந்து களிகூறும் போது, நீங்களும் நானும் அவர் சமுகத்தை தேட வேண்டியது எவ்வளவு நிச்சயமாக உள்ளது.

ஆதலால் தான் சங்கீதக்காரன் செய்யும் ஒரு ஜெபத்தை பாருங்கள்.

**சங்கீதம் 51:11** உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்.

ஆவியில் சோர்ந்து போன சகோதரனே, சகோதரியே! பின்வருமாறு தேவனை நோக்கி கெஞ்சுங்கள்.

**"இயேசுவே! உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாதேயும்".**

**சங்கீதம் 39:7** உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? என கதறுங்கள்.

ஏனெனில் **சங்கீதம் 105:4** கூறுகிறது:"கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்".

**பக்தன் பாடுகிறார்:–**

**பிரசன்னம் தாரும் தேவனே**
**உந்தன் சமுகம் தாருமே**
**இயேசுவே உந்தன் நாமத்தில்**
**இந்நேரம் நாங்கள் கூடி வந்தோம்.**

ஆம். இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்திலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.

## தேவசமுகத்தில் நிற்பவர்கள் யார்?

### 1. தூதன்

**ஏசாயா 63:9** அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்.

**மத்தேயு 18:10** இந்தச் சிறியரில் ஒருவரையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குரிய தூதர்கள் பரலோகத்திலே, என் பரம பிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்.

### 2. அபிஷேகம் பெற்றவர்கள்.

**சகரியா 4:14** இவைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள்.

**தேவசமுகத்தில் கூடி வரும் போது,**

தேவனுடைய வார்த்தை கிடைக்கிறது. ஆதலால் தான் நிருபங்களில் எபிரெயர் 10:25 **'சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறதுபோல நாமும் விட்டு விடாமல் . . .** என்பதாக.

கொர்நெலியுவைப் பார்த்து பேதுரு கூறுகிறார்:

அப்.10:33 நீர் வந்தது நல்ல காரியம். தேவனாலே உமக்குக் கட்டளையிட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லோரும் இப்பொழுது, இங்கே தேவசமுகத்தில் கூடியிருக்கிறோம்.

தேவனுடைய வார்த்தையை ஆவலோடு வாசிக்கும் நண்பரே!

கர்த்தருடைய சமுகம் உங்களுக்கு முன்செல்ல வேண்டுமானால், முதலாவது தேவசமுகத்திற்கு வாருங்கள்.

**சங்கீதம் 122:1** கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்குஅவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்.

தேவனுடைய ஆலயத்திற்குச் செல்லும்போது, தேவனால் அனுப்பப்பட்ட மனுஷன் அங்கே வந்து பிரங்சங்கிப்பார்கள்.

**நீங்கள் ஆலயத்தை விட்டு கடந்து செல்லும்போது தேவ சமுகம் உங்களுக்கு முன்பாகச் செல்லும்.**

தேவனுடைய சமுகத்தில் முழங்கால்படியிட்டு நிற்கும்போது, அவருடைய பிரசன்னம் இறங்கும்.

**துதித்துப் பாடும்போது தேவ பிரசன்னம் இறங்கும்.**

தேவனுடைய ஆலயத்தை விட்டு செல்லும்போது, **தேவசமுகம் உங்களுக்கு முன்பாகச் செல்லும்.**

கர்த்தர் வாக்களிக்கிறார் : **யாத்.33:14**

**என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்; நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

இந்த உண்மையை அறிந்திருந்த மோசே கூறுகிறார்:

**உம்முடைய சமுகம் என்னோடேகூடச் செல்லாமற் போனால், எங்களை இவ்விடத்தி லிருந்து கொண்டு போகாதிரும்.**

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே,

**உங்கள் ஊழிய பாதையிலே தேவசமுகம் முன்செல்ல வேண்டும்.**

**உங்கள் வியாபார பாதையிலே தேவசமுகம் முன்செல்ல வேண்டும்.**

**உங்கள் குடும்ப பாதையிலே தேவசமுகம் முன்செல்ல வேண்டும்.**

**உங்கள் வெளிநாட்டு பாதையிலே தேவசமுகம் முன்செல்ல வேண்டும்.**

**உங்கள் பரிட்சையின் பாதையிலே தேசமுகம் முன்செல்ல வேண்டும்.**

எதை எடுத்தாலும் உங்கள் வாழ்க்கையிலே தேவசமுகம் முன்செல்ல வேண்டும்.

யோனா தீர்க்கத்தரிசியைப் பாருங்கள்:

**யோனா 1:3** அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து, யோப்பாவுக்குப் போய், தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு, **கூலி கொடுத்து, தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி,** அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்.

ஆனால் புறஜாதியார் யோனாவைப் பார்த்து சொல்கிறதை கேளுங்கள்.

**யோனா 1:10** அவர் **கர்த்தருடைய சமுகத்தினின்று** விலகி ஓடிப் போகிறவன் என்று தங்களுக்கு அறிவித்ததினால், அந்த மனுஷர் மிகவும் பயந்து, அவனை நோக்கி: நீ ஏன் இதைச் செய்தாய் என்றார்கள்.

அன்பு தேவஊழியரே, விசுவாசியே உம்மைப் பார்த்து **நீ ஏன் இதைச் செய்தாய்** என்று கேட்கும் படியாக தேவசமுகத்தை விட்டு ஓடாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

ஒரு விசை தேவனுடைய சமுகத்திற்கு வாருங்கள்.

**என் சமுகம் எனக்கு முன்பாசச் செல்லும்** என தேவன் வாக்கு அருளியிருக்கிறார்.

இன்றைக்கு தேவசமுகம் உங்களுக்கு முன்செல்லும்

இந்த வாரத்தில் தேவசமுகம் உங்களுக்கு முன்செல்லும்

இந்த மாதத்தில் தேவசமுகம் உங்களுக்கு முன்செல்லும்.

**கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.**

**ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன். அதினால் என் மகிமை விளங்கும்.**

**நீங்களும் உங்கள் குடும்ப சார்பாக கர்த்தருக்கு ஒரு ஆலயத்தை கட்டலாமே?**

ஜெபவீடு அளவு

**15'X 30'** = **450** சதுர அடி

**1** சதுர அடி = ரூ. 350/-

450 சதுர அடி = ரூ.1,57,500/-

**தற்காலிக கூடாரம் அமைக்க** ரூ.40,000 தேவை.

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## திருநெல்வேலி மாவட்டம்- ராதாபுரம் யூனியன்

## 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2008 அக்டோபர் 6** திங்கள் காலை 9 மணி முதல் **அக்டோபர் 11** சனி இரவு 10 மணி முடிய **திருநெல்வேலி மாவட்டம் - ராதாபுரம் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2008 அக்டோபர் 6** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2008 அக்டோபர் 11** சனி இரவு **7 - 10** முடிய

**( 2008 அக்டோபர் 6 - 11 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**செகினா குட்நியூஸ் மிஷன் சர்ச்,**
**உருமங்குளம் கிராமம் & போஸ்ட்**
**திசையன்விளை வழி,**
**திருநெல்வேலி - 627 657.**
**செல் : 9865925803**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த பாஸ்டர் **S. ஜெயசீலன்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# திருவண்ணாமலை - புதுப்பாளையம் யூனியன் 100-கிராம ஊழியம் அறிக்கை

THANKS: PATMOS ( DR.TOR & SIS.FERA )



கர்த்தருடைய கிருபையால், **திருவண்ணாமலை மாவட்டம் – புதுப்பாளையம்** யூனியனில் 18.08.2008 திங்கள் கிழமை முதல் 22.08.2008 வெள்ளி வரை செங்கம் ALC அடைக்கல நாதர் ஆலயத்தில் **100– கிராம ஊழியம்** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசி நாள் கூடுமிடம் உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை செங்கம் Bro. R. தாஸ். Rtd. H.M. அவர்களும் உடன் ஊழியர்களும் பொறுப்பெடுத்து உதவி செய்தார்கள்.

முதல் நாள் ஜெபத்தில் புதுப்பாளையம் யூனியனிலுள்ள கிராமங் களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இதில் ALC சபை குருவானவர் REV. Dr. J. **மனோவா** அவர்கள் தேவ செய்தி கொடுத்தார்கள். ALC மூத்த போதகர் **Rev. டேனியல் ஞானசேகரன்** அவர்களும், ALC கண் மருத்துவமனை நிர்வாக அதிகாரி Bro. G. **வாலின்ஸ் நிரஞ்சன்** அவர்களும் ஊழியர்களுக்காக ஊழியங்களுக்காக ஜெபித்தார்கள்.

தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களி லிருந்து 51 பேர் கிராம ஊழியம் செய்ய வந்திருந்தார்கள். 12 குழுவாகப் பிரித்து, அவரவர் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். இதன் பின் மதிய உணவிற்குப் பிறகு கிராம ஊழியர்கள் கிராமங்களுக்குள் ஜெபித்து அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் போய் கிராமங்களில் கிடைக்கிற இடங்களில் தங்கிக் கொண்டு 5 நாட்கள் கிராம ஊழியம் செய்தார்கள். இப்படி மொத்தம் 12,097 வீடுகளுக்கு வீட்டிற்கு ஒரு யோவான் புத்தகம் இலவசமாக கொடுத்து இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து வந்தார்கள். இதோடு 20,000 கைப்பிரதிகளும், 10,000 சிலுவைக்கொடிகளையும் மக்களுக்கு இலவசமாக வழங்கினார்கள். இப்படி 5நாள் ஊழியங்களை செய்த முடித்து, மீண்டும் முன்பு கூடிய செங்கம் ALC சர்ச்சில் கூடி ஜெபித்து கர்த்தர் தங்களை எப்படி நடத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினர்.

**பாஸ்டர் இம்மானுவேல் ஏஞ்சலோ,** அவரது துணைவியார் **பியூலா** ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து தேவசெய்தியும், சாட்சியும் அளித்தார்கள். சகோ. **பி.டி.கிறிஸ்டோபர்** இவர்களுடைய **திருமண நாளுக்காக** விசேஷ ஜெபம் ஏறெடுத்தார்கள்.

இந்த ஊழியத்தின் போது 196 பேர் தங்கள் விலாசங்களைக் கொடுத்து அவர்களுக்காக ஜெபிக்கும்படியும், வேதபாடங்ககளை தபால் மூலம் அனுப்பும்படியும் கேட்டுக்கொண்டார்கள்.

## அன்புடன் அழைக்கிறோம்!

இவ்வூழிய அறிக்கையை வாசிக்கும் கர்த்தருடைய பிள்ளைகளே!

ஒரு முறை நீங்களும் 100–கிராம ஊழியத்தில் 5 நாட்கள் பங்கு பெற அன்புடன் வருந்தி அழைக்கிறோம்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

<u>குழு 1:</u> **சகோ.தாஹாகனி, சூசைமாணிக்கம், ஜோசப் பெஞ்சமின், எபிநேசர்,**

அம்மாபாளையம் சமத்துவபுரத்தில் ஆர்வமாக சுவிசேஷம் கேட்டார்கள். காரியபட்டு, இறையூர், அண்ணா நகர் ஆகிய கிராமங்களில் மக்கள் அநேகர் ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டனர். **விண்ணவனூார்** என்ற கிராமத்தில் ஊழியம் செய்தபோது ஆர்வமாக கேட்டார்கள். பவானி என்ற சகோதரி மற்றும் குமார் என்ற டெய்லர் தங்களை இயேசுவுக்காக ஒப்புக் கொடுத்தார்கள். **நாங்கள் விண்ணவனூரில் இருந்து விண்ணகத்துக்குச் செல்ல விரும்புகிறோம்** என்று கூறினார்கள். 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 500 சிலுவைக்கொடிகளும், கொடுத்தோம்.

<u>குழு 2:</u> **சகோ.பிரேம் ஆனந்த், ஸ்டேன்லி, ஜேசுதாஸ், ஸ்டீபன் குருசாமி, யோசுவா**

பனைஒலைப்பாடி, படிஅக்ரஹாரம், வாசுதேவன்பட்டு, கோட்டாக்கரை, தேவனந்தல், கிராமங்களில் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, ஒருசிலர் மட்டும் வேண்டாம் என்று சொன்னார்கள். நாங்கள் நிழலுக்காக ஒரு இடத்தில் உட்கார்ந்தபோது அங்கிருந்த ஓலை மேய்பவரிடம் சத்தியத்தை சொன்ன போது, அவர் என் பிள்ளைகள் எல்லாம் நன்றாக இருக்கிறார்கள் எல்லாவற்றையும் பார்த்துவிட்டேன். இனி நான் இருந்தால் என்ன காடுபோனால் என்ன எனக்கு எதற்கு பரலோகம் இப்போது எனக்கு தேவை ஒருபாக்கட் சாராயம். அது இப்போ இல்லையே என்று அங்கலாய்த்தார். சுவிசேஷம் கூறினோம். 1065சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

<u>குழு 3:</u> **சகோதரி. லூயிஸ் அம்மாள், கிருபா பழனியம்மாள், மாலா, தெரசாபேபி,**

ஒருசிலர் கர்த்தரை ஏற்றுக் கொண்டு சபைக்கு வருவதாக சொன்னார்கள். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

<u>குழு 4:</u> **பாஸ்டர் ஆல்வின், சகோ. ஜெபமலைநாதன், தாவீது தங்கவேல், சாமுவேல்,**

நாங்கள் காஞ்சி ஊராட்சியிலுள்ள கிராமங்களுக்கு சென்று சுவிசேஷத்தை அறிவித்து வீடுகள் தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். அநேக மக்களுக்காக ஜெபித்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

<u>குழு 5:</u> **சகோதரி.டோராலாசர், அமிர்தம், சீலா, சமாதானமேரி, சலோமி சம்மனசு.**

புதுப்பாளையம் ஊராட்சியில் உள்ள கிராமங்களுக்கு சென்று ஊழியம் செய்தோம். வீடுகளில் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுததோம். சிலர் மதத்தைப் பரப்புவதற்காக இந்தப் புத்தகத்தைக் கொடுக்கிறீர்களா ? என்றார்கள். ஒரு அம்மா சாகப்போகிற நேரத்தில் இதை எதற்காக தருகிறீர்கள் என்று கேட்டார்கள். நம்மைப் படைத்த ஆண்டவரைப் பற்றி இந்த புத்தகத்தில் எழுதியிருக்கிறது யாவரும் தெரிந்து கொள்ள இதைக் கொடுக்கிறோம் என்று சொன்னபோது வாங்கிக் கொண்டார்கள். 1000 சுவிசேஷப் புத்தகங்களும் 1000 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு6: சகோ.மாற்குமாரியப்பன், மகாராஜன், பாபு சாலமோன், சாலமோன்,**

உண்ணாமலை பாளையம், பெரியேரி, புதூர், மாரியம்மன் கோவில் கிராமங்களில் சுவிசேஷம் சொல்லி வரும்போது 2 வாலிபர்கள், இப்படி புத்தகம் கொடுப்பதற்கு உங்களுக்கு எவ்வளவு பணம் தருகிறார்கள் ? என்று கேட்டனர். இவர்களுக்கு எங்களுக்கு எந்தவித பணமும் கொடுக்கவில்லை. இயேசு வியாதியாயிருந்த எனக்கு நல்ல சுகம் கொடுத்தார். இதனால் இந்த புத்தத்தைக் கொடுக்கிறோம் என்று சொன்னோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு7: சகோ. இஸ்ரவேல், பீட்டர் ராமலிங்கம்,இஸ்தாக்கி, அந்தோணி,**

நாங்கள் குலால்பாடி, நத்தவாடி, வடமாத்துார், கல்லக்கொட்டாய், ஆண்டிதாங்கள், பெரியகுளம் போன்ற கிராமங்களில் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தபோது ஆர்வமுடன் ஏற்றுக் கொண்டனர். ஒரு விடுதியிலுள்ள 80 சிறு பிள்ளைகளுக்கு இயேசுவைப்பற்றி சொல்லி ஜெபித்தோம். மொத்தம் 1050 சுவிசேஷப் புத்தகங்களும் 1000 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 8: சகோதரி. மரியம்மாள், கஸ்துாரி, மேரி மீனா, ரூத் பகவதி,**

நோயினால் கஷ்டப்பட்ட மக்களுக்கு ஜெபித்தோம். இங்குள்ள எல்லா மக்களும் விவசாயத்தொழில் செய்கிறார்கள் மிகவும் ஏழையான மக்கள். இவர்கள் எங்களிடம் ஏதாவது உதவிகள் கிடைக்குமா என்று கேட்டனர். 1050 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 9 : சகோதரி எஸ்தர், அன்னாள், பிச்சையம்மாள், தெபோராள்.**

நாங்கள் முறையார், கொல்லக் கொட்டாய் கிராமங்களுக்கு சென்று இயேசுவைப் பற்றி கூறினோம். எந்த எதிர்ப்புகளும் இல்லை. வரவேற்புமில்லை. ஒரு சிலர் எங்களுக்கு உங்கள் இயேசுவே வேண்டாம் என்றனர். சில வாலிபர்கள் அன்போடு வாங்கி படித்தார்கள். ஆணைமங்கலம் கிராமத்திற்கு போகும் வழியில் ஒரு பெரியவர் எங்களை ஊருக்குள் போகாதீர்கள் என்று சொல்லி ஊருக்குள் ஒடி அந்த பெரியவர் ஜனங்களிடம் ஆண்கள் பெண்கள் வேஷம் போட்டுக் கொண்டு 4 பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். திருடுவதற்காக பார்த்துவிட்டு போக வருகிறார்கள் என்று சொன்னதாலே அந்த ஊரார் எங்களை மறித்து இப்படியே ஓடிப்போங்கள். இல்லையெனில் போலீஸில் பிடித்து கொடுத்து விடுவோம் என்றார்கள். நாங்கள் உடனே எங்களிடம் கத்தி இல்லை, நீங்கள் குறிப்பிடுகிற ஆட்கள் நாங்கள் இல்லை, இதோ எங்களிடம் சுவிசேஷப் புத்தகம் , சிலுவைக்கொடிகள் உள்ளது என்று சொல்லி கிராமத்திற்குள் போய் எல்லா வீடுகளுக்கும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். மொத்தம் 1032 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 10: சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், கிளமெண்ட்ஸ்மேரி, ஜெபமணி, அந்தோணியம்மாள்.**

நாங்கள் 9 கிராமங்களில் யோவான் புத்தகம் கொடுத்து நற்செய்தி அறிவித்தோம்.வியாதி யுள்ளவர்களையும் சந்தித்து ஜெபித்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

# நாட்டு நடப்புச் செய்திகள்

**ஓரிஸா:-** ஒரிஸாவில் கிறிஸ்தவ ஆலயங்கள் அடித்து நொறுக்கப்பட்டது. அநேக இடங்களில் எரிக்கப்பட்டது.

கிறிஸ்தவர்கள் பாதுகாப்பில்லாமல் காட்டுக்குள் ஓடி ஒழித்தனர். கன்னியாஸ்திரிகள் கற்பழிக்கப்பட்டார்கள்.

**திருநெல்வேலி:-** நெல்லையை தகர்க்க லாரி நிறைய வெடி குண்டுகள் தீவிரவாதிகளிடம் போலீசார் நடத்திய விசாரணையில் தெரிய வந்தது.

Holy God T.V. அலுவலகம் மதவெறியர்களால் அடித்து நொறுக்கப்பட்டது. அங்கிருந்த 2 அலுவலர்களும் கடுமையாக தாக்கப்பட்டு உள்ளனர். பாஸ்டர் உதயக்குமாருக்காக ஜெபியுங்கள்.

இன்டர் நெட்டில் சுலபமாகவும் வேகமாகவும் விபரங்களைத் தேட "க்ளு பேஜஸ் பீட்டா" என்ற புதிய வசதியை யாகூ நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

**குழு 11: சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், லீதியாள், தேவகிருபை.**

எங்களுக்கு கொடுக்கப்பட்ட 8 கிராமங்களுக்கும் சென்று வீடு வீடாக சுவிசேஷபுத்தகம், சிலுவைக் கொடி கொடுத்தபோது, சந்தோஷமாக இரு கரம் நீட்டி வாங்கிக் கொண்டனர். வியாதியுள்ளவர்களுக்கும் கணவனால் கொடுமைப் படுத்தப்பட்டவர்களுக்கும் ஜெபித்தோம். ஒரு பெண்ணுக்கு ஜெபித்தபோது அவள் மேலிருந்த அசுத்தஆவி ஆடி, அலக் கழித்துவிட்டுப் போய்விட்டது. மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு12: சகோதரி டோராலாசர், அன்னக்கிளி, ஜோதிமணி, பாக்கியம்.**

ஆலப்புத்தூர் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் ஊழியம் செய்தபோது, 3 பெரியவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு ஆர்வமுடன் ஆலயத்திற்கு வருவதாக சொன்னார்கள். கிராமங்களில் பெண்கள் அவமானப்படுத்தப்படுவதாகவும், நீங்கள் இப்படி இனி வராதீர்கள் என்றும் எங்களை எச்சரித்தார்கள். 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம். **தேவனுக்கே மகிமை!.**

**ஆகஸ்டு மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை**



கர்த்தருடைய கிருபையால் ஈரோடு மாவட்டம் – காங்கேயம் யூனியனில் 30.08.2008 அன்று அங்குள்ள ஏ.ஜி. சபையில் இயேசுவை விரும்புவோர் முகாம் நடைபெற்றது.

இம்முகாமிற்கு வரும்படி 55 புறமத நண்பர்களுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப் பட்டதில் 3 பெண்கள் மட்டும் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டனர். பாஸ்டர் K.C.சாமுவேல் அவர்கள் கிறிஸ்துவுக்குள் நடத்தி, உற்சாகப் படுத்தினார்கள். ஆர்வமுடன் கேட்டு தங்களை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தார்கள். தேவனுக்கே மகிமை.

நன்றி: பாஸ்டர் K.C.சாமுவேல், A.G..சபை

**நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.**

# துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

1. Sis. **பாப்பம்மாள், சென்னை.**
23.06.08 மகளின் திருமணத்தை கர்த்தர் ஆசீர்வாதமாக நடத்தித் தந்தார்.

2. Bro. **தங்கராசு பவுல், கரூர்.**
மகள் ஓவிய ஆசிரியர் பயிற்சியில் வெற்றி பெறவும், எங்கள் ஊரில் ஆராதனை நடைபெறவும் கர்த்தர் கிருபை செய்தார்.

3. Bro. **சேகர், திருவண்ணாமலை,**
B.A.படிப்பில் வெற்றி கிடைத்தது.

4. Sis. **நகோமி, சிவகங்கை.**
தாங்கள் ஜெபித்து **'கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார். இனி தீங்கைக் காணாதிருப்பாய்'** என பதில் எழுதியிருந்தீர்கள். இப்பொழுது என் கணவர் என்னிடம் திரும்பி வந்து விட்டார். தொலைந்து போன T.C. மற்றும் ரேஷன் கார்டு கிடைத்து விட்டது. அதை விட பெரிய அற்புதம் 8 வருடம் குழந்தையில்லாமலிருந்த எனக்கு ஆண்டவர் குழந்தை பாக்கியத்தை கொடுத்து, இப்போது 9 மாத கர்ப்பிணியாக உள்ளேன்.

5. Sis. **மரியம்மாள், ஈரோடு.**
நான் பள்ளியில் சேரவும், ஹாஸ்டல் கிடைக்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

6. Sis. **வியாகுலமேரி, திருச்சி.**
19.07.08 எனது பிறந்த நாளன்று நெஞ்சுவலி, கை,கால் வேதனை காணப் பட்டது. அப்பொழுது விசுவாசத்தோடு நீங்கள் அனுப்பிய **பிறந்தநாள் வாழ்த்து** கடிதத்தை வைத்து ஜெபித்தேன். கர்த்தர் சுகத்தைக் கொடுத்தார்.

7. Sis. **இசபெல்லா, திண்டுக்கல்.**
எனக்கு 3 நாட்களாக வயிற்று வலி, வாந்தியினால் கஷ்டப்பட்டேன். கர்த்தர் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

8. Sis. **கிறிஸ்டி கரோலின், பெரம்பலூர்.**
D.T.Ed. முதலாமாண்டு தேர்வில் 82 % எடுத்து வெற்றி பெற கிருபை செய்தார்.

9. Bro. **கிறிஸ்டோபர், நெல்லை.**
என் மூத்த மருமகனுக்கு இரத்தக் குழாயிலுள்ள 2 அடைப்புகள் **'நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்'** (யோ 11 :40) என்ற வசனத்தின்படி சுகமானது.

10.Sis. **காயத்ரி, பெரம்பலூர்.**
நான் போலீஸாக வேண்டுமென கடிதம் எழுதியிந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தரின் கிருபையால் போலீஸ் வேலை கிடைத்தது.

11. Bro. **சுரேஷ், திருவள்ளூர்.**
திருச்சியிலிருந்து '100–கிராம ஊழியம்' செய்ய வந்த 5 சகோதரிகள் என் குடும்பத்தில் வந்து ஜெபித்தார்கள். அவர்கள் ஜெபித்த நாள் முதல் இந்த நாள் வரை எந்தவித கஷ்டமும் இல்லை.

12. Sis. **ராதா, திருச்சி.**
நான் 6வது செமஸ்டர் மற்றும் அரியர் பேப்பர்களுக்கும் ஜெபிக்கக் கேட்டிருந்தேன். கர்த்தர் வெற்றி தந்தார்.

## 2008 அக்டோபர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : கோயம்புத்தூர்
யூனியன் : குடிமங்கலம்
நாள் : 18.10.2008 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**பாஸ்டர் . எபிநேசர்,**
**தேவனுடைய வீடு,**
**பாரதி நகர், நாலு ரோடு,**
**பெட்ரோல் பங்க் பின்புறம்,**
**குடிமங்கலம் - 642 201.**
**கோவை மாவட்டம்.**
**செல்: 98657 91401.**

**என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும். யாத்.33:14**

# கலிலேயா முகாம் 2008

## (மகிழ்ச்சியான நாட்கள்)

நாள் : **2008 அக்டோபர் 10,11,12** வெள்ளி,சனி,ஞாயிறு

இடம் : **கோடாவிளை பஸ் ஸ்டாப்**

( உவரிக்கும் கூடன்குளத்திற்கும் மத்தியில் )

நேரம் : **தினமும் மாலை 6.30 மணிக்கு**

(100 கிராம ஊழியர் சாட்சிகள் சனிக்கிழமை காலை **10 – 1** )

*Dr. Lawrance Manuel Prayer Hall* - பிரதிஷ்டை காலை 11 மணி

**தேவ செய்தியாளர்:**

## சகோ. எபிநேசர் பாலையா

( நித்திய ஆசீர்வாத ஊழியங்கள்- பாளையங்கோட்டை )

**ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் ! துதியுங்கள் !**

**முகாம் ஒருங்கிணைப்பாளர்**

**திரு. மனோகர் ஆசிரியர்,**
தொலைபேசி :04637–272664
மொபைல் : 94864 81522

**திரு. இரத்தினம் ஆசிரியர்,**
தொலைபேசி : 04637–276306
சிறுவர் இல்லம் : 04637– 276309

**மீட்பரின் பணியில்,**
**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,**
**மேனேஜிங் டிரஸ்டி.**
**தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்,**
**100 கிராமம்,**
**திருச்சி – 620 102.**
மொபைல் : **94435 44628**

**முக்கிய குறிப்பு**

1. **டி.வி.ஜி.எம்** கிராம ஊழியங்களுக்காக உண்டியல், ரசீது புத்தம் வாங்கியிருப்பவர்கள் முகாமில் தவறாமல் கொண்டு வாருங்கள்.
2. திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையிலிருந்து கோடாவிளை வருவதற்கு அநேக மினி பஸ் உண்டு.
3. நாகர்கோவிலிருந்து கூடன்குளம், ஆத்தங்கரை பள்ளிவாசல், நவலடி **கோடாவிளை பஸ்டாப்** வழியாக உவரி, திருச்செந்தூர், தூத்துக்குடி போகும் பஸ்ஸில் ஏறி வரலாம்.
4. **கலிலேயா முகாமில்** 3 நாட்கள் தங்கியிருக்க அனுமதி உண்டு
5. **தனித்தனியாகவும், குடும்பத்திற்காகவும் ஊழியர் ஜெபிப்பார்கள்.**
6. கோடாவிளை சிறுவர் இல்லம் கட்டடப்பணிக்காக ஜெபியுங்கள்.

**பாஸ்டர் பால் கமலேந்திரன் - U.K அவர்கள் குடும்பத்துடன் திருச்சி டி.வி.ஜி.எம். ஊழியங்களை பார்வையிட்டார்கள்.**




TVGM ஞாயிறு ஆராதனையில் பாஸ்டர் பால் தேவசெய்தியளித்தார்.




TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளுடன் பாஸ்டர் குடும்பம்.



இலங்கை அகதிமுகாமில் தேவஊழியரின் உடைந்த வீடு.



ஊழியரின் பிள்ளைகளை பாஸ்டர் பால் குடும்பம் பார்வையிட்டார்கள்.



குண்டல் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளை பார்வையிட்டார்கள். சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு அடிக்கடி சிறப்பு விருந்தளித்தார்கள்.



சந்தோஷ் வித்யாலயாவில் படிக்கும் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள் கிறிஸ்டினா, மனிஷாவை பார்வையிட்டார்கள்.

**குறிப்பு:**

பாஸ்டர் பால் குடும்பத்தினர் 1 வாரம் டெல்லியிலும்,2 வாரங்கள் TVGM லும் தங்கியிருந்து கிராமஊழியங்களை நேரடியாக பார்வையிட்டார்கள்.

**தேவனுக்கே மகிமை!**

## சகோதரி ஜமுனா வீரதாஸ் - U.K அவர்கள் குடும்பத்துடன் திருச்சி டி.வி.ஜி.எம். ஊழியங்களை பார்வையிட்டார்கள்.



TVGM மூலம் நௌஃபா நகரில் கட்டப்பட்டுள்ள ஜெபவீட்டை பார்வையிட்டார்கள்.



வேந்தன்பட்டி கிராமத்தில் புதிதாக ஜெபவீடு கட்டப் போகும் நிலத்தில் ஜெபித்தார்கள்.





சூறாவளிப்பட்டி கிராமத்தை பார்வையிட்டு விதவைகள் மத்தியில் சாட்சி கொடுத்து அனைவருக்கும் உணவு கொடுத்தார்கள்.





தான் பொருளுதவியினால் மாதந்தோறும் தாங்கி வரும் சிறுவர் இல்ல மாணவன் ரத்னகுமாரை நேரடியாக பார்த்து, ஜெபித்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.



சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு விருந்து, அன்பளிப்புகள் வழங்கினார்கள்.
மற்றும் பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனியில் உணவு வழங்கினார்கள்.

**எழுந்து கட்டுவோம் வாருங்கள். நெகேமியா 2:18.**

## TVGM ஸ்தாபகரிடமிருந்து . . . . . . . . . . . . . . .

தேவசமாதானம் உண்டாவதாக!

தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலயமில்லாத கிராமங்களில் ஜெபவீடுகள் 13 யூனியன்களில் கட்டவேண்டுமென்ற ஒரு தரிசனத்தோடு ஆரம்பித்த நாங்கள் இன்று திருச்சி மற்றும் பல மாவட்டங்களில் கர்த்தர் கொடுக்கும் கிருபையின் படியாக ஜெபவீடுகள் கட்டி வருகிறோம். **ஆனாலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜெபவீடு கட்டுவதற்கு ஊழியர்களிடம் நிலம் இல்லையே** என நினைக்கும்பொழுதெல்லாம் மனவேதனையடைகிறோம். **ஊழியர்கள் நிலம் வாங்க ஜெபியுங்கள்.**

தற்சமயம் கோடாவிளை, காவூர், கும்மனந்தொழுவு, சென்னிமலை, வேந்தன்பட்டி, முத்துநகர், மிஞ்சூர், தாயனூர் ஆகிய 8 கிராமங்களில் கட்டப்பட்டு வரும் ஜெபவீடு வேலைகள் சீக்கிரம் முடிவடைய ஜெபியுங்கள்.

குறிப்பாக அண்டகுளம், விராச்சிலை, குருவகுளம் ஆகிய மூன்று கிராமங்களிலும் ஜெப வீடு கட்டி முடிக்கும் தருவாயில் இருந்தாலும் R.S.S.தொல்லையினால் இன்று வரை திறக்க முடியாமலிருக்கிறது.

மேலும் சூரியக்குடி, அகினேஷ்புரம், தொட்டியம், பெருவளநல்லூர், வையப்பமலை, கறம்பக்குடி, ஆலங்குடி, வெள்ளனூர், காட்டுமன்னார்குடி ஆகிய 9 இடங்களையும் நேரடியாக பார்வையிட்டு **ஜெபவீடு** தேவை என்பதை உணர்ந்தும், பொருளுதவி செய்ய முடியாத நிலையிலிருக்கிறோம்.

இதுபோக எங்களுக்கு விண்ணப்பங்கள் வந்து கொண்டேயிருக்கிறது. புதுப்பேட்டை, கண்டனூர், மகிமைநகர், கொரடாச்சேரி, L.N. புரம், சின்னமனூர், கன்னிவாடி, காரைக்கால், புதுக்குடி, சோழபுரம், மருங்குளம், சீர்காழி . . . ( தொடரும் ) இவைகளை போய் பார்க்கவோ, உதவி செய்யவோ TVGM–ல் பொருளாதாரம் இல்லை.

மேலும் விண்ணப்பம் செய்யாமல் நேரடியாக அல்லது தொலைபேசி மூலமாக கேட்பவர்கள் பலர் உள்ளனர். இதை கணக்கிட முடியவில்லை.

**யாராக இருந்தாலும் ரூ.10 மணியார்டர் செய்து விண்ணப்பம் படிவம் பெற்று நிரப்பி தர வேண்டுமென்பது டி.வி.ஜி.எம். ஒழுங்காகும்.**

இதைத் தவிர ஆலயத்திற்கு தரை போட வேண்டும், கதவுகள் போட வேண்டும், பூச வேண்டும் என்று நன்கொடை கேட்டு வருவோர் அநேகர் உள்ளார்கள். **நாங்கள் எந்த வெளிநாட்டு நிரந்தர உதவியைக் கொண்டும்** (Foreign Aid ) **இதை செய்யவில்லையென உறுதியாய் கூறுகிறோம்.**

நாங்கள் பிரசங்கிக்கிற ஆலயங்களிலும், 100–கிராம பத்திரிக்கையிலும் வெளியிடும்போது, ஏதோ ஒரு சிலர் முழுமையாகவோ, சற்று குறைவாகவோ ஒரு சபையை பொறுப்பெடுத்து கட்டிக் கொடுக்க முன்வருகிறார்கள்.

ஏற்கெனவே நாங்கள் வாக்குக்கொடுத்து, கட்டமுடியாமல் இருக்கும் சபைகள் உத்தேசமாக 9 உள்ளது. முதலாவது இதற்கு உதவும் கரங்கள் தேவை. ஜெபியுங்கள். மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். பங்குபெறுங்கள். **கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**“நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது”. யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள் :** டி.வி.ஜி.எம் டிரஸ்டுக்கு FCRA, 80 G, கோட்டா மற்றும் 35C ஆர்டர் கிடைக்க ஜெபியுங்கள்.

**செவ்வாய் :** டி.வி.ஜி.எம். தலைமை அலுவலகத்திற்கு அக்கவுண்டண்ட், டைப்பிஸ்ட், வார்டன், டிரைவர், சர்வேயர், வீடியோ எடிட்டர் போன்றவர்கள் குடும்பமாக கர்த்தர் கிருபையாக கொடுக்கும்படி ஜெபியுங்கள்.

**புதன் :** ஆகஸ்டு மாதத்தில் 6 ஜெப வீட்டை பிரதிஷ்டை செய்ய கிருபை செய்த தேவாதி தேவனை துதியுங்கள்.

கூடுதலாக கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் 3 + 8 ஜெபவீட்டை முடித்து ஏற்ற நாளில் பிரதிஷ்டை செய்ய ஜெபியுங்கள்.

டி.வி.ஜி.எம். ஸ்தாபகர் நேரடியாக பார்வையிட்டு வந்த 9 கிராமங்களில் ஜெபவீடுகள் கட்ட பொருளாதார வாசலை கர்த்தர் திறக்க ஜெபியுங்கள்.

**வியாழன் :** 2008 அக்டோபர் 6 – 11 வரை நடைபெறவுள்ள ராதாபுரம் யூனியன் 100–கிராம ஊழியத்திற்காகவும், அக்டோபர் 10 – 12 வரை நடைபெறவுள்ள கலிலேயா முகாமில் கர்த்தருடைய கிருபை விளங்கவும் ஜெபியுங்கள்.

ஒரு சிலர் தங்கள் சபை மூலம் யோவான் சுவிசேஷம் விநியோகிக்க வாஞ்சிக்கிறார்கள். தேவசித்தம் நிறைவேற ஜெபியுங்கள்.

**வெள்ளி :** 2008 நவம்பர் 3ம் தேதி **தாயனூர்** பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

கர்த்தருக்கு சித்தமானால் 2008 நவம்பர் 4, 5 தேதிகளில் TVGM தலைமை அலுவலகத்தில் 100–கிராம ஊழியர்களுக்கும், இந்த ஆண்டில் ஜெபவீடு கட்டிக் கொடுக்கப்பட்ட ஊழியர்களுக்கும் ஒரு ஸ்தோத்திர ஐக்கிய கூடுகையும், சவாலான தேவசெய்தியும் பாஸ்டர் ஜோசப் ஜெபமணி அவர்கள் மூலம் ஒழுங்கு செய்ய வாஞ்சிக்கிறோம். தேவசித்தம் நிறைவேற ஜெபியுங்கள்.

இதுவரை 100–கிராம ஊழியத்தில் பங்கு கொண்டு 5 நாட்கள் அலைந்து, திரிந்து ஊழியம் செய்த அனைவரும் தவறாமல் பங்கு கொள்வதற்கு இந்த அறிவிப்பு அவர்கள் கையில் கிடைக்க ஜெபியுங்கள்.

**சனி :** 100–கிராம ஊழியம் – மாதாந்திர பத்திரிக்கை ஸ்டாம்ப் சலுகையுடன் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு தந்த ஆர்டரை கேன்சல் செய்து Senior Superintendent of Post Office லிருந்து தபால் வந்துள்ளது. கர்த்தரின் கண்களில் தயை கிடைக்க ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** TVGM காரியதரிசி சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபருக்கு ஏற்ற நாளில் தேவசித்தத்தின்படி திருமணம் நடைபெற்று, குடும்பமாக கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்ற ஜெபியுங்கள். விசேஷமாக TVGM ஆதரவாளருக்காக, சேவையாளருக்காக ஜெபியுங்கள்.

என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும். யாத்.33:14.

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை / தேவசெய்தி

பாஸ்டர் D.ரவி ( கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கும் திருச்சபை, திருச்சி )

**நாள் :** 2008 அக்டோபர் 1 புதன் காலை 7 முதல் மாலை 7 மணி வரை

**வாக்குத்தத்தசெய்தி:** மாலை 7 – 8 மணி

**நன்றி :-**



01.09.2008 திங்கள் அன்று காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை நடைபெற்ற துதி ஆராதனையில் பெரும் பங்கேற்று நடத்தி தந்த **பாஸ்டர் ஜெபதாஸ்** அவர்களுக்கும், இரவு 7 – 8 மணி வரை வாக்குத்தத்த செய்தியளித்த **பாஸ்டர் ஞானதாஸ்** அவர்களுக்கும் எங்கள் நன்றி. Praise God.

## கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலக ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஆகஸ்டு மாத ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார். ஒரு புதிய சகோதரியை கர்த்தர் ஊழியத்தில் இணைத்தார். அஞ்சுகிராமம், வாரியூர், ஸ்ரீலட்சுமிபுரம் ஆகிய ஊர்களில் அறிமுகப்பணி செய்ய புதிய வாய்ப்பை தேவன் கொடுப்பார். இதற்கு பேருதவியாக இருந்த பாஸ்டர் பிரசாத் அவர்களுக்கு நன்றி கூறுகிறோம்.

ஜூலை, ஆகஸ்டு ஆகிய 2 மாதங்களிலும் 2 புதிய சகோதரிகளை கர்த்தர் தந்தபடியால் சந்திக்க இயலாத பகுதிகளையும் சந்திக்க கர்த்தர் உதவி செய்தார். 3 சுவிசேஷ ஊழியர்கள் மூலம் ஊழியம் தவறாமல் நடைபெற்றது.

மேலும் வடசேரி, கீழகலுங்கடி பகுதியில் ஒரு திறந்தவெளி இரவுக் கூட்டத்தில் பாடல்கள் பாடி, ஊழிய அறிமுகம் செய்து, செய்தியளிக்கும் ஊழிய வாய்ப்பை பாஸ்டர் பிரசாத் அவர்கள் மூலமாகவே செப்டம்பர் 1ம் தேதி மாலையில் தேவன் தந்தார். அதன் மூலமாகவும் சில புதிய தொடர்புகள் கிடைத்துள்ளது. தொடர்ந்து ஊழிய எல்லை விரிவடைய ஜெபியுங்கள்.

5 / 3A கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001.
**செல் : 98658 26424**
**போன் : 04652- 277251.**

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**
ஒருங்கிணைப்பாளர்.
கன்னியாகுமரி மாவட்டம்.

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER

TN / TR / 17 / 2006 - 2008 ( Inland ) TN / TR / 18 / 2006 - 2008 ( Foreign)

LICENCED TO POST WITHOUT PREPAYMENT

TN / TR / 09 / WPP ( Inland ) Posting Date 25th at H.P.O. Trichy.

TN / TR / 09 / WPP ( Foreign) Posting Date 20th at H.P.O. Trichy

## TVGM தலைமை அலுவலகம்

(ALL RECEIPTS ARE TREATED AS OFFERING TO TVGM)

**காணிக்கை மற்றும் தபால் அனுப்ப வேண்டிய முகவரி:-**

MR.STEPHEN CHRISTOPHER - MANAGING TRUSTEE

**TAMIL VILLAGE GOSPEL MISSION**

**4 / 272, HUNDRED VILLAGE**

SOMARASAMPETTAI,(Hospital Stop)

TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

## Bank டிராப்ட் எடுக்கும் முறையும் நோக்கமும்:-

TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)

T.V.G.M. SOCIAL SERVICE (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)

T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம்)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து MR. STEPHEN CHRISTOPHER, SB 1249101 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu. என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, மேற்கண்ட TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முகவரி,தொலைபேசியை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.

Canara Bank Indian Financial System Code( IFSC ):CNRB 0001249

TVGM தொடர்புகளுக்கு

STD Ph : 0-431 - 2607241

Fax : 0-431- 2607446

Mobile : 94435 - 44628

Email : 100village@tvgm.org

*Website :*

www.tvgm.org

தினசரி வாக்குத்தத்தம், செய்தி மற்றும் கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

## மாதாந்திர பத்திரிக்கை

**"100–கிராம ஊழியம்"** என்ற கிறிஸ்தவ மாதாந்திர பத்திரிக்கையை தமிழ் / ஆங்கிலத்தில் வாங்கி படியுங்கள். ஜெபியுங்கள்.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി _ हन्ड्रेड विलेज मिनिस्ट्री